10

வகுப்பறையில் மாணவர்களிடத்தே விமர்சன சிந்தனையை மேம்படுத்துவதில் ஆசிரியரின் வகிபாகம்

Mohamed Miswar Fathima Mirsadha

Faculty of Education, University of Colombo

அறிமுகம்

இன்றைய கல்வித்துறையில் விமர்சன சிந்தனை (Critical Thinking) என்பது மிக முக்கியமானதொரு திறனாகக் கருதப்படுகிறது. வேகமான தொழில்நுட்ப மாற்றங்கள், சிக்கலான சமூகச் சூழல்கள் மற்றும் இணையத்தின் ஊடாகத் தொடர்ச்சியாகக் கொட்டிக்கிடக்கும் தகவல்களின் பெருக்கம் காரணமாக, மாணவர்கள் ஒரு தகவலை ஆழமாக ஆராய்ந்து, அதன் உண்மைத்தன்மையை மதிப்பிட்டுப் புரிந்துகொள்ள வேண்டிய தேவை இன்று அதிகமாகியுள்ளது (குயஉழைநெஇ 2015). வெறும் மனப்பாடக் கல்வியை மட்டுமே முதன்மையாகக் கொண்ட பாரம்பரியக் கற்றல் முறைகள் 21 ஆம் நூற்றாண்டின் உலகிற்குப் போதுமானதாக இருக்காது என்பதைப் பல கல்வி நிறுவனங்களும் உணர்ந்து வருகின்றன.

இந்த மாற்றத்தின் மையப் புள்ளியாக ஆசிரியரின் பங்கு அமைகின்றது. வகுப்பறையில் அறிவை மட்டும் வழங்கும் ஒருவராக இருந்த ஆசிரியர், இன்று மாணவர்களைத் தேடல், கலந்துரையாடல் மற்றும் சுயசிந்தனைப் பாதையில் வழிநடத்தும் ஒரு வழிகாட்டியாக மாறியுள்ளார். இன்றைய நவீன வகுப்பறைகள் ஆசிரியர்களுக்குப் புதிய வாய்ப்புகளைத் தரும் அதேவேளை, பல சவால்களையும்

ஏற்படுத்துகின்றன. இத்தகைய சூழலில், ஆசிரியர்கள் ஒருபுறம் பாடத்திட்டத்தை முடிக்க வேண்டிய தேவையையும், மறுபுறம் மாணவர்களின் உயர்மட்டச் சிந்தனைத் திறனை வளர்க்க வேண்டிய பொறுப்பையும் சமமாக நோக்க வேண்டியுள்ளது. எனவே, நவீன கல்வியில் விமர்சன சிந்தனையை உருவாக்குவதில் ஆசிரியர்கள் எத்தகைய பங்கினை ஆற்றுகின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. இந்தக் கட்டுரை, இன்றைய வகுப்பறைகளில் விமர்சன சிந்தனையை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகள், அதற்கான கோட்பாட்டு அடிப்படைகள், வகுப்பறை நடைமுறைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து ஆராய்கிறது.

கல்விச்சூழலில் விமர்சன சிந்தனை மற்றும் அதற்கான அவசியம்

விமர்சன சிந்தனை என்பது ஒரு மாணவர் தகவலை ஏற்றுக்கொள்ளாமல், அதை ஆராய்ந்து, மதிப்பாய்வு செய்து, உரிய முடிவுகளை எடுக்கக்கூடிய திறனாக வரையறுக்கப்படுகிறது. இன்று உலகம் வேகமாக மாறி வருகின்;றது தகவல்கள் இணையம், சமூக ஊடகங்கள், தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலம் எளிதாகவும் விரைவாகவும் கிடைக்கின்றன. இதனால் மாணவர்கள் எந்த தகவலை நம்பி, எந்த தகவலை மறுத்து, எந்த தகவலை முழுமையாகப் பயன்படுத்துவது என்பதை தீர்மானிக்கச் செய்யும் திறன் அவசியமாகியுள்ளது (டீசழழமகநைடனஇ 2012).

பழைய கல்வி முறைகள், குறிப்பாக (rote learning) குறுந்தகவலை நினைவில் வைப்பதை மட்டும் முக்கியமாகக் கருதி வந்தது. ஆனால் இன்று, மாணவர்கள் சிக்கலான சூழல்களில் சுயமாக சிந்தித்து, பிரச்சனைகளை தீர்க்கவும், நேர்மையான முடிவுகளை எடுக்கவும் தயாராக இருக்க வேண்டும். இதற்காக விமர்சன சிந்தனையை

வளர்க்கும் கற்றல் முறைகளான ஆராய்ச்சி சார்ந்த கற்றல் (Inquiry-Based Learning), சாக்ரடிஸின் வினா எழுப்பும் முறை (Socratic Questioning)இ பிரச்சனை அடிப்படையிலான கற்றல் (Problem-Based Learning) போன்ற அணுகுமுறைகள் அவசியமாகின்றன (Paul & Elderஇ 2014). தேடல், பகுப்பாய்வு, கலந்துரையாடல், காரண காரியத் தொடர்பு, பிரச்சனை தீர்க்கும் திறன், மற்றும் சுயசிந்தனை போன்றவற்றை விமர்சன சிந்தனையின் முக்கிய அம்சங்களாக குறிப்பிடலாம்.

தேடல் மற்றும் பகுப்பாய்வுத் திறனினூடாக மாணவர்கள் ஒரு கருத்து, நிலை, தகவல் அல்லது விளைவுகளை பூரணமாக ஆராய்ந்து, அதன் பல்வேறு அம்சங்களை பிரித்தறிய முடியும். உதாரணமாக, ஒரு சமூகப் பிரச்சினையை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அதனால் யாருக்கு நன்மை கிடைக்கும், யாரேல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்று சிந்திக்கக்கூடிய ஆற்றல் வளர்கிறது (குயஉழைநெஇ 2015). கலந்துரையாடல்களும் காரண காரியத் தொடர்பும் மாணவர்கள் ஒரு முடிவிற்கு வரும்போது, அதற்கான சான்றுகளையும் காரணங்களையும் முன்வைக்க உதவுகின்றன. மாணவர்கள் எந்தவொரு கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் 'இது எப்படி உண்மை என நிருபிக்கப்படும்?' 'இதிலுள்ள மாற்றுப்பார்வைகள் என்ன?' அல்லது 'இதன் இறுதி முடிவு என்னவாக இருக்கும்?' போன்ற கேள்விகளை எழுப்ப பழக வேண்டும். இக்கேள்விகளே அவர்களை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

விமர்சன சிந்தனையின் முக்கிய நோக்கம், மாணவர்கள் பெற்ற அறிவை பயன்படுத்தி சிக்கலான பிரச்சனைகளை சுயசிந்தனையோடும் துல்லியத்துடன் தீர்க்கும் திறனை வளர்த்தல் ஆகும். இதனால் அவர்கள் தன்னம்பிக்கையும் சுய ஆளுமையும் கொண்டவர்களாக மாறுகின்றனர் (னுநறநலஇ 1933). நவீன கல்விச் சூழலில் விமர்சன சிந்தனையை வளர்ப்பது மிக முக்கிய ஒன்றாக

கருதப்படுகின்றது. நவீன உலகில், தொழில்நுட்பம், இணையத்தளங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற வசதிகள் மாணவர்களுக்கு தகவல்களை உடனுக்குடன் வழங்கினாலும் அதேவேளையில், தவறான தகவல்களும், அளவுக்கு அதிகமான தரவுகளும் மாணவர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இதனால், மாணவர்கள் தனிப்பட்ட அறிவையும், திறனையும் பயன்படுத்தி, எது உண்மையான தகவல், எது தவறான தகவல் என்பதைப் பிரித்தறியக் கற்றுக்கொள்வது அவசியமாகிறது (டீசழழமகநைடனஇ2012). மேலும், உலகமயமாக்கல், கலாசாரப் பன்முகத்தன்மை ,தொழில்துறை மாற்றங்கள் போன்ற காரணிகளால் மாணவர்கள் எதிர்கொள்ளும் சூழல் நாளுக்கு நாள் சிக்கலாகி வருகின்றன.

விமர்சன சிந்தனையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களின் வகிபாகம்

மாணவர்களிடம் விமர்சன சிந்தனையை வளர்ப்பதில் ஆசிரியர்களுக்கு முதன்மையான பங்கு உண்டு. ஆசிரியர்கள் மாணவர்களைச் சரியாக வழிநடத்தி, அவர்கள் கேள்விகளை எழுப்புவதற்கான ஒரு சுமுகமான சூழலை வகுப்பறையில் உருவாக்க வேண்டும். பாடப்புத்தகத்தில் உள்ளதை அப்படியே சொல்லித் தராமல், மாணவர்கள் உலக நடப்புகளை ஆராய்ந்து சிந்திக்கவும், சொந்தமாக முடிவுகளை எடுக்கவும், பிரச்சினைகளைத் திறம்படத் தீர்க்கவும் கூடியவர்களாக உருவாக்குவதே இன்றைய கல்வியின் முக்கிய இலக்காகும் (டீசழழமகநைடனஇ 2012).

இது அறிவுக்கட்டமைப்புவாதக் கற்றல் கோட்பாடுகளுடன் (Constructivist Learning Theories) நேரடியாகத் தொடர்புபடுகிறது (ஏலபழவளமலஇ 1978). அதாவது, கற்றல் என்பது மாணவர்கள் தாமாகவே கருத்துக்களை விளங்கி, அர்த்தங்களை உருவாக்கிக் கொள்ளும் போதுதான் சிறப்பாக

நடைபெறும் என்பதாகும். அதேபோல், மாணவர்கள் தங்களின் அன்றாட அனுபவங்களுடன் புதிய கருத்துக்களை இணைத்துப் பார்த்துக் கேள்விகள் கேட்கும் போதுதான் உண்மையான கற்றல் நிகழ்கிறது. எனவே, இங்கு ஆசிரியரின் பணி என்பது வகுப்பறையை அமைதியாக வைத்திருப்பதுடன் மட்டும் முடிந்துவிடுவதில்லை; மாணவர்கள் எப்படிச் சிந்திக்க வேண்டும் என்பதை வடிவமைக்கும் ஒரு பெரிய பொறுப்பாக மாறுகிறது.

வகுப்பறையில் ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக இருந்து, மாணவர்களின் தேடல் ஆர்வத்தைத் தூண்டி, சாக்ரடீஸின் வினா முறையைக் கையாண்டு, குழு வேலைகள், கலந்துரையாடல்கள், தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் சுய மதிப்பீடு போன்றவற்றின் ஊடாக மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்க முடியும். இதனை வகுப்பறையில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்று நோக்கினால்:

ஆசிரியர் மாணவர்களின் கேள்விகளுக்குத் தானே நேரடியாகப் பதிலைச் சொல்லிவிடாமல், மேலும் சில கேள்விகளைக் கேட்டு, மாணவர்களையே தேடிப் பதிலைக் கண்டறிய ஊக்குவிக்க வேண்டும் (டீசழழமகநைடனஇ 2012). உதாரணமாக ஒரு கணித வகுப்பில், "இந்தக் கணக்கை வேறு என்னென்ன வழிகளில் தீர்க்கலாம்?" என்று கேள்வி கேட்கும் போது மாணவர்கள் குழுக்களாக இணைந்து அதற்கான வழிகளைக் கண்டறிவர். சாக்ரடீஸின் வினா முறையில், ஆசிரியர் மாணவர்களிடம் தொடர்ச்சியான கேள்விகளைக் கேட்பதன் மூலம் அவர்களின் சிந்தனையைத் தூண்டலாம். இது மாணவர்களின் பகுப்பாய்வுத் திறனை அதிகரிக்க உதவுகிறது.

ஆசிரியர் குழு கற்றல் முறையைப் பயன்படுத்தும் போது, மாணவர்கள் தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். இதன் மூலம் அடுத்தவர்களின் கருத்துக்களையும் மதிக்கும் பண்பு

அவர்களிடம் வளர்கிறது. இத்தகைய குழு விவாதங்கள் அறிவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கப் பெரிதும் உதவுகின்றன. கணினி மாதிரிகள் மற்றும் இணையத் தேடல் கருவிகள் போன்ற டிஜிட்டல் சாதனங்களும் மாணவர்களின் ஆய்வுத் திறனை வளர்க்கப் பயன்படுகின்றன. இதன் மூலம் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து, அதன் முடிவுகளைக் கணிக்க மாணவர்கள் பழகிக் கொள்கின்றனர் (குயஉழைநெஇ 2015).

மேலும், வகுப்பறையில் மாணவர்கள் தாங்கள் கற்ற விஷயங்களைத் தாங்களே சுய மதிப்பீடு செய்து பார்க்கவும் ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். இது அவர்களின் உயர்மட்டச் சிந்தனைத் திறனை (Higher-Order Thinking Skills) வளர்க்கும். இன்றைய நவீன வகுப்பறையில் ஆசிரியர் என்பவர் வெறும் போதகர் அல்லர், அவர் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் ஒரு சிறந்த அமைப்பாளர் ஆவார்.

மாணவர்களிடத்தில் விமர்சன சிந்தனையை ஊக்குவிப்பதற்கான வகுப்பறை நடைமுறைகள்

இன்றைய கல்வியில், மாணவர்களின் விமர்சன சிந்தனையை வளர்ப்பதற்குப் பாடப்பரப்பைத் தாண்டி, மாணவர்களைச் சொந்தமாகச் செயல்பட வைக்க வேண்டும். அவர்கள் தேடல்களிலும், பகுப்பாய்வுகளிலும், விவாதங்களிலும் ஈடுபடும் வகையில் கற்றல் செயல்பாடுகளை அமைக்க வேண்டும் (Pயரட ரூ நுடனநசஇ 2014). இந்த வகுப்பறை நடைமுறைகளை நான்கு முக்கிய பிரிவுகளாகப் பார்க்கலாம்: வினா எழுப்பும் உத்திகள், கூட்டுக்கற்றல் (Collaborative Learning)இ பிரச்சினை அடிப்படையிலான கற்றல் (Problem-Based Learning) மற்றும் சுய மதிப்பீடும் பிரதிபலிப்பு என்பவையாகும். இவை வகுப்பறையில் நடைமுறைப் படுத்தப்படும் முறைகளை நோக்கினால், சாக்ரடீஸின் வினா முறையானது மாணவர்களை ஆழமாக யோசிக்க வைக்கவும், கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்து அதற்கான

சான்றுகளுடன் பதிலளிக்க வைக்கவும் உதவும் ஒரு நல்ல வழியாகும். உதாரணமாக, ஒரு அறிவியல் வகுப்பில் ஆசிரியர் “இந்தத் தாவரத்தின் அமைப்பில் ஏன் இத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது?” என்று கேட்கும் போது, மாணவர்கள் குழுக்களாக இணைந்து தகவல்களைச் சேகரித்து, அதற்கான காரணங்களை ஆராய்வர். இதன் மூலம் காரண காரியத் தொடர்புகளை விளங்கி, வாதங்களை முன்வைக்கும் திறனைப் பெறுகின்றனர் (ஏலபழவளமலஇ 1978).

கூட்டுக்கற்றல் முறையில் மாணவர்கள் குழுக்களாக இணைந்து வேலை செய்வதால் பரஸ்பர கலந்துரையாடலும், கூட்டுழைப்பும், பகுப்பாய்வுத் திறனும் வளர்கின்றன. உதாரணமாக ஒரு வரலாற்று வகுப்பில், பிரித்தானியர் கால இலங்கை பற்றிய ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு குழுவும் அதற்கான வரலாற்றுச் சான்றுகளை முன்வைத்து விவாதங்களில் ஈடுபடலாம். இந்த நடைமுறை மாணவர்கள் மாற்றுப் பார்வைகளைப் புரிந்துகொள்ளவும், குழுவாக இணைந்து முடிவெடுக்கவும் வழிவகுக்கிறது.

பிரச்சினை அடிப்படையிலான கற்றல் (PBL) முறையில் மாணவர்கள் நிஜ வாழ்க்கையில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு, அதற்கான தீர்வுகளைத் தேடி, தரவுகளை ஆராய்ந்து முடிவுகளை எடுப்பார்கள். இதன் மூலம் அவர்கள் சொந்தமாகச் சிந்தித்து பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலைப் பெறுகின்றனர் (டீசழழமகநைடனஇ 2012). அத்துடன், தாங்கள் கற்றவற்றைத் தாங்களே சுய மதிப்பீடு செய்யும் போது அவர்களின் சிந்தனைத் திறன் மேலும் கூர்மையடைகிறது. இத்தகைய செயல்பாடுகள் ஆசிரியரின் வழிகாட்டலுடன் வகுப்பறையில் நடக்கும் போது, மாணவர்களின் ஆளுமையும் சிந்தனைத் திறனும் நிஜமான சூழலில் வளர்கின்றன. இது அவர்களை 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ற, விழிப்புணர்வுள்ள குடிமக்களாக உருவாக்க உதவுகிறது.

மாணவர்களின் விமர்சன சிந்தனையை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள்

மாணவர்களில் விமர்சன சிந்தனையை வளர்ப்பது நவீன கல்வியின் முக்கிய குறிக்கோளாகும் (குயஉழைநெஇ 2015). ஆசிரியர்கள் இதனை நடைமுறைப்படுத்தும் போது பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இச்சவால்கள் பெரும்பாலும் பாடத்திட்டக் கட்டுப்பாடுகள், மாணவர்களின் பின்னணி, போதிய வளங்கள் இல்லாமை மற்றும் தேர்வு முறைகள் ஆகியவற்றுடன் தொடர்புபட்டவையாக இருக்கின்றன.

பாடத்திட்டம் மற்றும் நேரக் கட்டுப்பாடுகள்: இலங்கையின் கல்விச் சூழலில், முக்கியமாக உயர் வகுப்புகளில் தேசிய தேர்வுகளைக் கருத்திற்கொண்டு பாடத்திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்கு உள்ளது. இதனால், வகுப்பறையில் குழு விவாதங்கள் அல்லது பிரச்சினை தீர்க்கும் கற்றல் செயல்பாடுகளுக்குச் செலவிட நேரமில்லாமல் போகிறது. இதற்குத் தீர்வாக, பாடத்திட்டத்தைத் தாண்டி தனியாக நேரம் ஒதுக்காமல், அன்றாடப் பாடங்களை நடத்தும் போதே சிறிய விவாதங்களையும், சிந்தனையைத் தூண்டும் எளிய கேள்விகளையும் பாடத்துடன் இணைத்துக் கொண்டு போகலாம் (Pநசநசயரூ ளுயஅயசயளiபொநஇ 2018).

மாணவர்களின் தயார்தன்மை மற்றும் ஈடுபாடு: பல மாணவர்களுக்கு ஆரம்பத்தில் ஒரு விஷயத்தைப் பகுப்பாய்வு செய்யும் திறனோ அல்லது சொந்தமாகச் சிந்திக்கும் ஆற்றலோ குறைவாக இருக்க வாய்ப்புண்டு (வுயn இ 2017). சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கூட, தொடக்கக் காலத்தில் மாணவர்கள் திறந்த கேள்விகளுக்கும் பிரச்சினை அடிப்படையிலான கற்றல் செயல்பாடுகளுக்கும் சிரமப்பட்டனர். இதற்குத் தீர்வாக, ஆசிரியர் சிந்தனையைத் தூண்டும் எளிய கேள்விகளைப் படிப்படியாக

அறிமுகப்படுத்த வேண்டும். தொடக்கத்தில் சுலபமான கேள்விகளைggggggggggggக் கேட்டு மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்து, பின்னர் சிக்கலான மாதிரி ஆய்வுகளுக்கு (case studies) அவர்களைக் கொண்டு செல்லலாம்.

வளங்கள் மற்றும் தொழில்நுட்பக் குறைவு: நவீன சிந்தனைத் திறனை வளர்க்கச் சில டிஜிட்டல் கருவிகளோ அல்லது ஆய்வுப் பொருட்களோ தேவைப்படலாம். வளரும் நாடுகளின் கிராமப்புறப் பள்ளிகளில் கணினி அல்லது இணைய வசதிகள் போதியளவில் இல்லாததால், அறிவியல் வகுப்புகளில் மெய்நிகர் ஆய்வகங்களை (Virtual Labs) பயன்படுத்துவது சவாலாக உள்ளது (சுயழ ரூ ளுயசஅயஇ 2019). இவ்வாறான சூழ்நிலைகளில், அதிக செலவில்லாத, உள்ளூரில் கிடைக்கக்கூடிய எளிய பொருட்களைக் கொண்டு மாணவர்களைச் சோதனைகள் மற்றும் தேடல்களில் ஈடுபடுத்தலாம்.

பாரம்பரிய தேர்வு முறைகள்: தற்போதைய தேர்வு முறைகள், குறிப்பாகப் பன்முகத் தெரிவு வினாக்கள் (MCQs) மாணவர்களின் ஆழமான சிந்தனையை முழுமையாக அளவிடுவதில்லை (குயஉழைநெஇ 2015). இதனால் ஆசிரியர்களும் தேர்வுப் புள்ளிகளை நோக்கமாகக் கொண்டு, சிந்தனை செயல்பாடுகளைக் குறைத்துக் கொள்ள நேரிடுகிறது. இதற்குத் தீர்வாக, இறுதித் தேர்வுகளை மட்டுமே நம்பியிருக்காமல் வகுப்பறைக் குழுத் திட்டங்கள், மாணவர்களின் சுய பிரதிபலிப்புப் பதிவுகள் மற்றும் மாதிரி ஆய்வுகள் போன்ற தொடர் மதிப்பீட்டு முறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களின் பன்முகத்தன்மை: ஒரு வகுப்பறையில் வெவ்வேறு கற்றல் வேகம், குடும்பப் பின்னணி மற்றும் முன்னறிவைக் கொண்ட மாணவர்கள் இருப்பார்கள். பன்முகக் கலாசார சூழல் கொண்ட வகுப்பறைகளில் சில மாணவர்கள் மொழி அல்லது கூச்ச சுபாவம் காரணமாக விவாதங்களில் பங்கேற்கத் தயங்குவர் (ர்யசசளைஇ 2016).

இவ்வாறான வகுப்பறைகளில் வாய்மொழி விவாதங்கள் மட்டுமன்றி, எழுத்து மூலமான செயல்பாடுகள், சிறிய குழு வேலைகள் மற்றும் தோழமைக் கற்றல் (Peer Learning) போன்ற பல்வேறு வழிகளை ஆசிரியர் கையாளலாம்.

இவ்வாறான சவால்கள் இருப்பினும், ஆசிரியர்கள் பல்வேறு செயல்முறைகளை பயன்படுத்தி வெற்றிகரமாக விமர்சன சிந்தனை வளர்க்க முடியும். பாடத்திட்டத்தில் நடவடிக்கைகளை இணைத்தல், மாணவர்களின் தயார்தன்மையை மேம்படுத்தல், வளங்களுடன் பழகல், மதிப்பீட்டின் புதிய முறைகளை பயன்படுத்தல், பன்முகத் திறன்களை ஊக்குவித்தல் ஆகியவை விமர்சன சிந்தனையை வளர்ப்பதற்கான கற்றல் சூழலை உருவாக்குகின்றன.

முடிவுரை

விமர்சன சிந்தனை என்பது இன்றைய நவீன கல்விக்கு மிகவும் இன்றியமையாத ஒரு திறனாகும். மாணவர்களை வெறுமனே பாடங்களை மனனம் செய்பவர்களாக மாற்றாமல், சொந்தமாகச் சிந்திப்பவர்களாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் உருவாக்குவதில் ஆசிரியர்களுக்குப் பெரும் பொறுப்பு உள்ளது. பாடத்திட்டச் சுமை, நேரமின்மை, போதிய வளங்கள் இல்லாமை போன்ற சவால்கள் இருந்தாலும், ஆசிரியர்கள் ஒரு போதகராக மட்டுமன்றி, வழிகாட்டியாகவும் ஊக்குவிப்பாளராகவும் செயல்படும் போது இச்சவால்களை முறியடிக்க முடியும். கல்வியின் உண்மையான நோக்கம் மாணவர்களுக்குத் தகவல்களைத் திணிப்பது அல்ல் மாறாக, அவர்கள் உலக நடப்புகளைத் தாமாகவே ஆராய்ந்து, சரியான முடிவுகளை எடுத்து, நிஜ வாழ்க்கைப் பிரச்சினைகளைப் படைப்பாற்றலோடு தீர்க்கக்கூடிய சிறந்த ஆளுமைகளாக உருவாக்குவதே ஆகும்.

உசாத்துணைகள்

Brookfield, S. D. (2012). Teaching for critical thinking: Tools and techniques to help students question their assumptions. Jossey-Bass.

Dewey, J. (1933). How we think. D. C. Heath.

Facione, P. A. (2015). Critical thinking: What it is and why it counts. Insight Assessment.

Harris, J. (2016). Teaching in multicultural classrooms: Strategies for inclusive learning. Routledge.

Paul, R., & Elder, L. (2014). The miniature guide to critical thinking concepts and tools. Foundation for Critical Thinking.

Perera, L., & Samarasinghe, D. (2018). Challenges in promoting inquiry-based learning in Sri Lankan secondary schools. Journal of Educational Practice, 9(12), 45-53.

Rao, S., & Sharma, K. (2019). Digital divides and the limitations of technology in rural education in India. Asian Journal of Education, 15(2), 22-35.

Tan, P. (2017). Developing critical thinking skills in Singapore classrooms: Teacher perspectives. Singapore Educational Review, 24(1), 33-47.

Vygotsky, L. S. (1978). Mind in society: The development of higher psychological processes. Harvard University Press.